இளைஞர்

இலக்கண விளக்கம்

ஆசிரியர்

V. G. ஸ்ரீநிவாஸய்யங்கார், B.A., L.T.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 MAY 1934
MADRAS

1933 [விலை அணா 4

இளைஞர்

இலக்கண விளக்கம்

I. எழுத்து

உபாத்தியாயர்:—உனக்குத் தெரிந்த வார்த்தைகளில் ஏதாவது ஒரு வார்த்தை சொல்?

மாணவன்:—கண்.

உபா:—அந்த வார்த்தையில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன?

மாண:—இரண்டு எழுத்துக்கள் இருக்கின்றன?

உபா:—'பணம்' என்ற வார்த்தையில் எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன?

மாண:—மூன்றெழுத்துக்கள் இருக்கின்றன.

உபா:—'கிண்ணம்', 'கங்கணம்' என்ற வார்த்தைகளில் எத்தனை எத்தனை எழுத்துக்கள் இருக்கின்றன?

மாண:—'கிண்ணம்' என்பதில் நான்கெழுத்துக்களும் 'கங்கணம்' என்பதில் ஐந்தெழுத்துக்களும் இருக்கின்றன.

உபா:—ஆகவே ஒவ்வொரு வார்த்தையிலும் சில எழுத்துக்கள் இருக்க வேண்டுமல்லவா?

மாண:—ஆம்.

உபா:—அப்படியானால் சொல் எவைகளால் ஆனது?

மாண:—எழுத்துக்களால் ஆனது.

உபா:—ஆகவே எழுத்து என்றால் என்ன?

மாண:—சொல்லுக்கு அவசியமானது எழுத்து.

967

உபா:—எழுத்துக்களை வாயால் சொல்லிக்காட்டலாமல்லவா?

மாண:—சொல்லிக் காட்டலாம்.

உபா:—எழுத்துக்களைக் கண்ணாற் பார்ப்பதற்கு நீ என்ன செய்வாய்?

மாண:—எழுதுவேன்.

உபா:—அப்படிக் கண்ணால் காண்பதற்கு உதவியாக எழுதிக் காட்டுவதை வரி வடிவு என்று சொல்லலாம். காதாற் கேட்கும்படியாக வாயாற் சொல்வதை ஒலி வடிவு என்று சொல்லலாம். எழுத்துக்களுக்கு எத்தனை வடிவங்கள் உண்டு? அவை எவை?

மாண:—எழுத்துக்களுக்கு இரண்டு வடிவங்கள் உண்டு. அவை வரி வடிவு, ஒலி வடிவு என்பன.

1. எழுத்துக்களின் வகை

உபா:—'அச்சம்' என்ற வார்த்தையிலுள்ள நான்கு எழுத்துக்களும் ஒரே மாதிரியாயிருக்கின்றனவா?

மாண:—இல்லை. அ, ச என்ற இரண்டெழுத்துக்களில் புள்ளி இல்லை. ச், ம் என்ற இரண்டெழுத்துக்களிலும் புள்ளிகள் இருக்கின்றன.

உபா:—அ, ச என்ற எழுத்துக்களில் அ என்ற எழுத்தை ஒரு வார்த்தையின் நடுவிலாவது கடைசியிலாவது வைத்துச் சொல்ல முடியுமா?

மாண:—அ என்ற எழுத்து வார்த்தையின் நடுவிலும் கடைசியிலும் வராது.

உபா:—ச என்ற எழுத்தை உச்சரித்துப் பார்க்கும்பொழுது அதில் தோன்றும் ஒலிகள் எவை?

மாண:—ச் என்ற புள்ளி எழுத்தின் ஒலியும் அ என்ற எழுத்தின் ஒலியும் கலந்து தோன்றுகின்றன.

உபா:—அப்படியானல் அ என்பது புள்ளி யெழுத்துக்களு டன் கலந்துவரு மல்லவா?

மாண:—கலந்துவரும்.

உபா:—அப்படியானல் அ என்பதைப் போன்ற எழுத்துக் களின் தன்மையைச் சொல்.

மாண:—அவ்வெழுத்துக்கள் தாங்கள் தனியாக வருவதுடன் புள்ளி யெழுத்துக்களுடன் கலந்தும் வரும்.

உபா:—அப்படிப்பட்ட எழுத்துக்களுக்கு உயிரெழுத்துக்கள் என்று பெயர். அம்மாதிரியான உயிரெழுத்துக்களில் சில எழுத்துக்களைச் சொல்.

மாண:—அ, ஆ, இ, உ.

உபா:—புள்ளி எழுத்தைச் சொல்லுக்கு முதலில் வைக்க முடியுமா?

மாண:—முடியாது.

உபா:—அப்படியானல் அப்புள்ளி எழுத்து சொல்லுக்கு முத லில் வரவேண்டுமானல் என்ன செய்யவேண்டும்?

மாண:—புள்ளி எழுத்துடன் உயிரெழுத்தைக் கலக்க வேண் டும்.

உபா:—புள்ளி எழுத்துக்களில் சிலவற்றைச் சொல்.

மாண:—க், ச், த், ப் முதலியன.

உபா:—இம்மாதிரியான புள்ளி எழுத்துக்களுக்கு மெய் யெழுத்துக்கள் என்று பெயர். இனி உயிரெழுத்தும் புள்ளி எழுத்தும் கலந்த எழுத்துக்களில் சில எழுத்துக் களைச் சொல்.

மாண:—க, சா, தி, பு முதலியன.

உபா:—இப்படி உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் கலந்த எழுத்துக்களுக்கு உயிர்மெய் யெழுத்துக்கள் என்று பெயர். இவ்வெழுத்துக்களைத் தவிர வேறு ஏதாவது எழுத்தும் உண்டா?

மாண:—உண்டு. மூன்று புள்ளி வடிவுடன் வருகின்ற ஒரு எழுத்து இருக்கிறது.

உபா:—சரி. அதற்கு ஆய்தவெழுத்து என்று பெயர். ஆகவே எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?

மாண:—உயிரேழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆய்த வெழுத்து என நான்கு வகைப்படும்.

2. உயிரெழுத்து

உபா:—உயிரெழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

மாண:—உயிரேழுத்துக்கள் பன்னிரண்டு. அவை அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன.

உபா:—இப் பன்னிரண்டெழுத்துக்களும் ஒரே மாதிரியாய் இருக்கின்றனவா?

மாண:—ஒரே மாதிரியாயில்லை. சில எழுத்துக்களைக் குறுக்கி யும் சில எழுத்துக்களை நீட்டியும் சொல்லவேண்டியிருக் கின்றது.

உபா:—குறுக்கிச் சொல்லவேண்டிய எழுத்துக்களுக்குக் குற் றெழுத்துக்கள் என்று பெயர். அத்தகைய குற்றெழுத் துக்கள் எத்தனை? அவை எவை?

மாண:—குற்றெழுத்துக்கள் ஐந்து. அவை அ, இ, உ, எ, ஒ என்பன.

உபா:—நீட்டிச் சொல்லவேண்டிய எழுத்துக்களுக்கு நெட் டெழுத்துக்கள் என்று பெயர். அப்படிப்பட்ட நெட் டெழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

மாண:—நெட்டெழுத்துக்கள் ஏழு. அவை ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்பன.

பயிற்சி 1.

பின் வரும் வார்த்தைகளிலிருந்து உயிர்க் குற்றெழுத்தையும் நெட்டெழுத்தையும் தனித்தனியாகப் பிரித்துக் கீழுள்ள கட்டங் களில் எழுது.

அவள், ஈகை, ஐயம், ஆவல், உரல், ஏணி, ஔவை, ஒன்று, ஓடு, ஊது, இங்கே, ஐந்து, ஆணி, ஏது, எடு, அணில், உலகம்.

குறில்	நெடில்

3. மெய்யெழுத்து

உபா:—மெய்யெழுத்துக்கள் எத்தனை? அவற்றைச் சொல்.

மாண:—மெய்யெழுத்துக்கள் பதினெட்டு. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்பன.

உபா:—இப் பதினெட்டெழுத்துக்களும் ஒரே மாதிரியான ஓசையுடையனவா யிருக்கின்றனவா?

மாண:—இல்லை. சில எழுத்துக்கள் கடினமான ஓசையுடையனவாயும், சில மெலிந்த ஓசையுடையனவாயும், சில நடுத்தரமான ஓசையுடையனவாயும் இருக்கின்றன.

உபா:—ஆம். கடினமான ஓசையுடைய எழுத்துக்களுக்கு வல்லெழுத்துக்கள் என்றும், மெல்லோசையுடைய எழுத்துக்களுக்கு மெல்லெழுத்துக்கள் என்றும், நடுத்தரமான ஓசையுடைய எழுத்துக்களுக்கு இடை யெழுத்துக்கள்

என்றும் பெயர். ஆகவே மெய்யெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?

மாண:—மெய்யெழுத்துக்கள் வல்லெழுத்து, மேல்லெழுத்து, இடையெழுத்து என மூன்று வகைப்படும்.

உபா:—வல்லினம், மெல்லினம் இடையினம் இம்மூன்றையும் தனித்தனியாக எடுத்தெழுதுக.

மாண:—க், ச், ட், த், ப், ற் இவ்வாறும் வல்லினம்.
ங், ஞ், ண், ந், ம், ன் இவ்வாறும் மேல்லினம்
ய், ர், ல், வ், ழ், ள் இவ்வாறும் இடையினம்

பயிற்சி 2.

பின்வரும் வார்த்தைகளிலிருந்து வல்லினம் மெல்லினம் இடையினம் என்ற மூன்றையும் தனித்தனியாகப் பிரித்துக் கீழுள்ள கட்டங்களில் எழுது.

தங்கம். நல்லவன். துக்கம். பட்டம். அர்த்தம்
வெள்ளி. தமிழ். அச்சம். பஞ்சம். கந்தன்.

வல்லினம்	மெல்லினம்	இடையினம்.

4. உயிர்மெய் யெழுத்து

உபா:—உயிர்மெய் யெழுத்துக்கள் மொத்தம் எத்தனை? காரணத்துடன் சொல்.

மாண:—உயிர்மெய் எழுத்துக்கள் மொத்தம் இருநூற்றுப்பதினாறு. பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் பதினெட்டு மெய்யெழுத்துக்களுடன் கலப்பதால் இருநூற்றுப் பதினாறுகின்றன.

உபா:—அவற்றுள் உயிர்மெய்க்குற் றெழுத்துக்கள் எத்தனை?

மாண:—உயிர்க் குற்றெழுத்துக்கள் ஐந்தும் பதினெட்டு மெய் யெழுத்துக்களுடன் கலப்பதால் உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் தொண்ணூறாகும்.

உபா:—உயிர் மெய் நெட்டெழுத்துக்கள் எத்தனை?

மாண:—உயிர் நெட்டெழுத்து ஏழும் பதினெட்டு மெய் யெழுத்துக்களுடன் கலப்பதால் உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் நூற்று இருபத்தாறாகும்.

உபா:—உயிர் மெய் வல்லெழுத்துக்கள் எத்தனை?

மாண:—பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் ஆறு வல்லெழுத்துக்களுடள் கலப்பதால் உயிர் மெய் வல்லெழுத்துக்கள் எழுபத்திரண்டாம்.

உபா:—உயிர் மெய் மெல்லெழுத்துக்கள் எத்தனை?

மாண:—பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் ஆறு மெல்லெழுத்துக்களுடன் கலப்பதால் உயிர் மெய் மெல்லெழுத்துக்களும் எழுபத்திரண்டாம்.

உபா:—உயிர் மெய் இடையெழுத்துக்கள் எத்தனை?

மாண:—பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் ஆறு இடையெழுத்துக்களுடன் கலப்பதால் உயிர் மெய் இடையெழுத்துக்களும் எழுபத்திரண்டாம்.

2

1. உயிர்மெய் யெழுத்துக்கள் 216.

	க்	ங்	ச்	ஞ்	ட்	ண்	த்	ந்
அ	க	ங	ச	ஞ	ட	ண	த	ந
ஆ	கா	ஙா	சா	ஞா	டா	ணா	தா	நா
இ	கி	ஙி	சி	ஞி	டி	ணி	தி	நி
ஈ	கீ	ஙீ	சீ	ஞீ	டீ	ணீ	தீ	நீ
உ	கு	ஙு	சு	ஞு	டு	ணு	து	நு
ஊ	கூ	ஙூ	சூ	ஞூ	டூ	ணூ	தூ	நூ
எ	கெ	ஙெ	செ	ஞெ	டெ	ணெ	தெ	நெ
ஏ	கே	ஙே	சே	ஞே	டே	ணே	தே	நே
ஐ	கை	ஙை	சை	ஞை	டை	ணை	தை	நை
ஒ	கொ	ஙொ	சொ	ஞொ	டொ	ணொ	தொ	நொ
ஓ	கோ	ஙோ	சோ	ஞோ	டோ	ணோ	தோ	நோ
ஔ	கௌ	ஙௌ	சௌ	ஞௌ	டௌ	ணௌ	தௌ	நௌ

ப்	ம்	ய்	ர்	ல்	வ்	ழ்	ள்	ற்	ன்
ப	ம	ய	ர	ல	வ	ழ	ள	ற	ன
பா	மா	யா	ரா	லா	வா	ழா	ளா	றா	னா
பி	மி	யி	ரி	லி	வி	ழி	ளி	றி	னி
பீ	மீ	யீ	ரீ	லீ	வீ	ழீ	ளீ	றீ	னீ
பு	மு	யு	ரு	லு	வு	ழு	ளு	று	னு
பூ	மூ	யூ	ரூ	லூ	வூ	ழூ	ளூ	றூ	னூ
பெ	மெ	யெ	ரெ	லெ	வெ	ழெ	ளெ	றெ	னெ
பே	மே	யே	ரே	லே	வே	ழே	ளே	றே	னே
பை	மை	யை	ரை	லை	வை	ழை	ளை	றை	னை
பொ	மொ	யொ	ரொ	லொ	வொ	ழொ	ளொ	றொ	னொ
போ	மோ	யோ	ரோ	லோ	வோ	ழோ	ளோ	றோ	னோ
பௌ	மௌ	யௌ	ரௌ	லௌ	வௌ	ழௌ	ளௌ	றௌ	னௌ

2. உயிர்மெய்க் குற்றெழுத்துக்கள் 90.

	அ	இ	உ	எ	ஒ
க்	க	கி	கு	கெ	கொ
ங்	ங	ஙி	ஙு	ஙெ	ஙொ
ச்	ச	சி	சு	செ	சொ
ஞ்	ஞ	ஞி	ஞு	ஞெ	ஞொ
ட்	ட	டி	டு	டெ	டொ
ண்	ண	ணி	ணு	ணெ	ணொ
த்	த	தி	து	தெ	தொ
ந்	ந	நி	நு	நெ	நொ
ப்	ப	பி	பு	பெ	பொ
ம்	ம	மி	மு	மெ	மொ
ய்	ய	யி	யு	யெ	யொ
ர்	ர	ரி	ரு	ரெ	ரொ
ல்	ல	லி	லு	லெ	லொ
வ்	வ	வி	வு	வெ	வொ
ழ்	ழ	ழி	ழு	ழெ	ழொ
ள்	ள	ளி	ளு	ளெ	ளொ
ற்	ற	றி	று	றெ	றொ
ன்	ன	னி	னு	னெ	னொ

3. உயிர்மெய் நெட்டெழுத்துக்கள் 126.

	ஆ	ஈ	ஊ	ஏ	ஐ	ஓ	ஔ
க்	கா	கீ	கூ	கே	கை	கோ	கௌ
ங்	ஙா	ஙீ	ஙூ	ஙே	ஙை	ஙோ	ஙௌ
ச்	சா	சீ	சூ	சே	சை	சோ	சௌ
ஞ்	ஞா	ஞீ	ஞூ	ஞே	ஞை	ஞோ	ஞௌ
ட்	டா	டீ	டூ	டே	டை	டோ	டௌ
ண்	ணா	ணீ	ணூ	ணே	ணை	ணோ	ணௌ
த்	தா	தீ	தூ	தே	தை	தோ	தௌ
ந்	நா	நீ	நூ	நே	நை	நோ	நௌ
ப்	பா	பீ	பூ	பே	பை	போ	பௌ
ம்	மா	மீ	மூ	மே	மை	மோ	மௌ
ய்	யா	யீ	யூ	யே	யை	யோ	யௌ
ர்	ரா	ரீ	ரூ	ரே	ரை	ரோ	ரௌ
ல்	லா	லீ	லூ	லே	லை	லோ	லௌ
வ்	வா	வீ	வூ	வே	வை	வோ	வௌ
ழ்	ழா	ழீ	ழூ	ழே	ழை	ழோ	ழௌ
ள்	ளா	ளீ	ளூ	ளே	ளை	ளோ	ளௌ
ற்	றா	றீ	றூ	றே	றை	றோ	றௌ
ன்	னா	னீ	னூ	னே	னை	னோ	னௌ

4. உயிர்மெய் வல்லெழுத்துக்கள் 72.

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
க்	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
த்	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ

5. உயிர்மெய் மெல்லெழுத்துக்கள் 72.

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

6. உயிர்மெய் இடையெழுத்துக்கள் 72.

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ

பயிற்சி 3

பின்வரும் வார்த்தைகளிலிருந்து உயிர்மெய்க் குற்றெழுத்துக்களையும் உயிர்மெய் நெட்டெழுத்துக்களையும் தனித்தனியாக எடுத்தெழுக.

ஆகாயம். வேளாண்மை. கயிறு. பழக்கம்.
வௌவால். ஔடதம். பொறுமை. குதூகலம்.

உயிர்மெய்க் குற்றெழுத்து.	உயிர்மெய் நெட்டெழுத்து.

பயிற்சி 4.

பின்வரும் சொற்களிலிருந்து உயிர்மெய் வல்லெழுத்துக்களையும் உயிர்மெய் மெல்லெழுத்துக்களையும் உயிர்மெய் இடையெழுத்துக்களையும் தனித்தனியே எடுத்தெழுது.

வேளாண்மை. கப்பல். கைத்தொழில். பம்பரம்.
மன்னவன். வண்ணான். பட்டாடை. கண்ணாடி.
மாமரம். நம்முடைய. வருவான். அழகு.

உயிர்மெய் வல்லெழுத்து.	உயிர்மெய் மெல்லெழுத்து	உயிர்மெய் இடையெழுத்து

5. ஆய்தவெழுத்து

உபா:—ஆய்த எழுத்து எது?

மாண:—ஃ என்ற மூன்று புள்ளி வடிவை யுடையதாய்வரும் எழுத்து ஆய்தவெழுத்தாம்.

உபா:—ஆகவே மொத்தம் எழுத்துக்கள் எத்தனை? அவற்றை வகையுடன் எடுத்தெழுது.

மாண:—தமிழ் நெடுங் கணக்கிலுள்ள எழுத்துக்கள் மொத்தம் இருநூற்று நாற்பத்தேழு.

உயிரெழுத்து	12
மெய்யெழுத்து	18
உயிர் மெய்யெழுத்து	216
ஆய்தவெழுத்து	1
	247

பயிற்சி 5

பின்வரும் வார்த்தைகளிலிருந்து உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து என்ற நான்கையும் தனித்தனியே எடுத்தெழுது.

கண்ணன்.	அரசன்.	இரும்பு.	ஏணி.
ஐயம்.	ஆகாயம்.	அங்கே.	பக்கம்.
இஃது.	அஃது.	வந்தான்.	எஃது.

உயிர்	மெய்	உயிர் மெய்	ஆய்தம்.

6. சுட்டெழுத்து

உபா:—தூரத்தில் போய்க் கொண்டிருக்கும் ஒருவனை உன் பக்கத்திலிருக்கும் நண்பனுக்குக் காண்பிக்க வேண்டுமானால் நீ உன் நண்பனிடம் என்ன சொல்வாய்!

மாண:—'அதோ போகும் அவனைப் பார்' என்பேன்.

உபா:—நீ சொன்னதில் தூரத்தில் செல்பவனைச் சுட்டிக் காட்டுவதற்கு உபயோகப்படும் வார்த்தை எது?

மாண:—'அவன்' என்ற வார்த்தை சுட்டிக் காண்பிக்கின்றது.

உபா:—அவ்வார்த்தை முழுவதும் சுட்டிக் காட்டுதற்கு உபயோகப் படுகின்றதா? அல்லது அவ்வார்த்தையில் ஏதாவது ஒரு எழுத்துமட்டும் உபயோகப்படுகின்றதா?

மாண:—'அவன்' என்ற வார்த்தையில் அ என்ற எழுத்து மட்டுமே சுட்டிக் காட்டுவதற்கு உபயோகப்படுகின்றது.

உபா:—தூரத்திலிருக்கும் ஒரு வீட்டைக் காட்டவேண்டு மானால் எப்படிச் சொல்வாய்?

மாண:—அவ்வீடு என்று சொல்வேன்.

உபா:—இப்படியே தூரத்திலிருக்கும் எந்தப் பொருளையும் சுட்டிக் காட்டவேண்டுமானால் என்ன சொல்வாய்.

மாண:—அந்தப் பொருளின் பெயருக்கு முன்னால் அ என்ற எழுத்தைச் சேர்த்துச் சொல்வேன்.

உபா:—உன் பக்கத்திலிருக்கும் மனிதனையோ வீட்டையோ வேறு பொருளையோ சுட்டிக் காட்டவேண்டுமானால் எப்படிச் சொல்ல வேண்டும்?

மாண:—பக்கத்திலிருக்கும் மனிதனைச் சுட்டிக் காட்டும் பொழுது இவன் அல்லது இம்மனிதன் என்று சொல்ல வேண்டும். இப்படியே வீட்டைச் சுட்டிக் காட்ட வேண்டுமானால் இவ்வீடு என்றும் ஒரு புத்தகத்தைச் சொல்ல வேண்டுமானால் இப்புத்தகம் என்றும் சொல்ல வேண்டும்.

உபா:—ஆகவே பக்கத்தில் இருப்பவர்களையும் பொருள்களை யும் சுட்டிக் காண்பிப்பதற்கு உபயோகப்படும் எழுத்து எது?

மாண:—இ என்ற எழுத்து பக்கத்தில் இருப்பவர்களைச் சுட் டிக் காட்டும்.

உபா:—அ இ என்ற எழுத்துக்களைத் தவிர உ என்ற எழுத் தும் சுட்டிக் காட்ட உபயோகப்படும். இப்படி சுட்டிக் காட்ட உபயோகப்படும் எழுத்துக்களுக்கு சுட்டெழுத் துக்கள் என்று பெயர். ஆகவே சுட்டெழுத்துக்கள் எத்தனை? அவை எவை?

மாண:—சுட்டெழுத்துக்கள் மூன்று. அவை அ, இ, உ என்பன.

உபா:—அரசன். இரும்பு. உலகம் இம்மூன்று வார்த்தைகளி லும் முதலில் உள்ள அ, இ, உ என்ற எழுத்துக்களைச் சுட்டெழுத்துக்கள் என்று சொல்லலாமா?

மாண:—கூடாது. அவ்வார்த்தைகளில் உள்ள எழுத்துக்கள் ஒன்றையும் சுட்டிக் காட்டவில்லை.

உபா:—அப்படியானால் சுட்டெழுத்தென்றால் என்ன?

மாண:—அ, இ, உ இம்மூன்றும் சுட்டிக்காட்டும் போது சுட் டெழுத்துக்களாம்.

(உ - ம்) அவன். அவ்வீடு.
இவன். இவ்வீடு.
உவன். உவ்வீடு.

7. வினாவெழுத்து

உபா:—எவ்வீடு? எட்டு இவ்விரண்டு சொற்களிலும் உள்ள 'எ' என்ற எழுத்திலுள்ள வித்தியாசம் என்ன?

மாண:—எவ்வீடு? என்பதிலுள்ள எ என்ற எழுத்து கேள் வியைக் காட்டுகின்றது. எட்டு என்பதிலுள்ள எ என்ற எழுத்து சாதாரணமான உயிரெழுத்து

உபா:—இம்மாதிரி கேள்விக்கு உபயோகமாகும் எழுத்துக் களுக்கு வினாவெழுத்துக்கள் என்று பெயர்? எ என் பதைத் தவிர யா, ஆ, ஓ, ஏ என்ற நான் கெழுத்துக் களும் வினாவெழுத்துக்களாக வரும். ஆகவே வினா வெழுத்தென்றால் என்ன? அவை எவை?

மாண:—வினாப்பொருளைத் தரும் எழுத்துக்கள் வினாவெழுத் துக்களாம். அவை எ, யா, ஆ, ஓ, ஏ என்ற ஐந்துமாம்.

(உ - ம்) எவன்?
யாவன்?
அவனா?
நானோ?
ஏது?

II. சொல்

1. சொல்வகை

உபா:—சொல் என்றால் என்ன?

மாண:—எழுத்துக்கள் பல சேர்ந்திருப்பது சொல்.

உபா:—'க ல ட ற ம்' இம்மாதிரி எழுத்துக்கள் பல சேர்ந்திருந்தால் இதைச் சோல் என்று சொல்லலாமா?

மாண:—இதைச் சோல் என்று சொல்லக்கூடாது.

உபா:—காரணம் என்ன?

மாண:—இதற்குப் பொருள் ஒன்றும் இல்லை.

உபா:—அப்படியானால் சொல் என்றால் என்ன?

மாண:—எழுத்துக்கள் பல சேர்ந்து ஏதாவது பொருளைத் தருமானால் அது சொல்லாகும்.

உபா:—நீ, வா, போ இம்மூன்றும் ஒரே எழுத்தாலாகி இருந்தும் பொருளைத் தருகின்றனவே. இவற்றைச் சொல் என்று சொல்லலாமா? கூடாதா?

மாண:—பொருளைத் தருமானால் ஒரு எழுத்தையும் சொல் என்று சொல்லலாம்.

உபா:—அப்படியானால் சொல் என்றால் என்ன என்பதைச் சரியானபடி சொல்.

மாண:—ஒரே எழுத்தாலாயினும் பல எழுத்துக்களாலாயினும் ஆக்கப்பட்டுப் பொருளைத் தருவது சொல்லாம்.

உபா:—உனக்குத் தெரிந்த சில சொற்களைச் சொல்.

மாண:—வா, போ, பார், நன்மை, கந்தன், பம்பரம்.

உபா:—'கந்தன் வந்தான்'. இங்கே எத்தனை சொற்கள் இருக்கின்றன?

மாண:—இரண்டு சொற்கள் இருக்கின்றன.

உபா:—'கந்தன்' என்ற சொல் எதைக் காட்டுகின்றது?

மாண:—ஒரு மனிதன் பெயர் என்பதைத் தெரிவிக்கின்றது.

உபா:—ஆகவே 'கந்தன்' என்பது என்ன சொல்?

மாண:—பெயர்ச் சொல்.

உபா:—நீ உனக்குத் தெரிந்த சில பெயர்ச்சொற்களைச் சொல்.

மாண:—கல், மரம், பறவை, இராமன், கிருஷ்ணன்.

உபா:—'வந்தான்' என்ற சொல் எதை உணர்த்துகின்றது?

மாண:—ஒரு மனிதன் செய்த செய்கையைக் காட்டுகின்றது.

உபா:—இம்மாதிரி செய்கையைக் காட்டும் சொல்லுக்கு, வினைச் சொல் என்று பெயர். உனக்குத் தெரிந்த வினைச்சொற்கள் சில கூறுக.

மாண:—வந்தான், படித்தார், போகின்றான், பாடுவான், விளையாடினான்.

உபா:—'கந்தனைக் கண்டான்' இதில் எத்தனை சொற்கள் இருக்கின்றன?

மாண:—கந்தன் என்ற ஒரு பெயர்ச்சொல்லும் கண்டான் என்ற ஒரு வினைச்சொல்லும் ஐ என்ற ஒரு எழுத்தும் இருக்கின்றன?

உபா:—அந்த ஐ என்பது எந்தச் சொல்லைச் சேர்ந்திருக்கிறது?

மாண:—கந்தன் என்ற பெயர்ச் சொல்லைச் சேர்ந்திருக்கிறது.

உபா:—இம்மாதிரி சில எழுத்துக்கள் பெயர்ச் சொல்லுடன் சேர்ந்து பொருள் தருவதை வேற்றுமை என்ற பாடத்தில் படிப்பாய். இவற்றைப்போல் இன்னும் சில எழுத்துக்களும் சொற்களும் வினைச்சொல்லையும் ஒட்டி வரும். இப்படிப் பெயரையும் வினையையும் ஒட்டி வரும்போது தான் இவற்றிற்குப் பொருள் உண்டு. இப்படிப்பட்ட

சொற்களுக்கு இடைச்சொற்கள் என்று பெயர். இனி. 'மிகப் புகழ்ந்தான்' என்பதில் எத்தனை சொற்கள் இருக்கின்றன?

மாண:—'மிக' என்றொரு சொல்லும் 'புகழ்ந்தான்' என்றொரு வினைச்சொல்லும் இருக்கின்றன.

உபா:—'மிக' என்பது எதைக் காட்டுகின்றது?

மாண:—மிக என்பது அதிகம் என்ற தன்மையைக் காட்டுகின்றது.

உபா:—இம்மாதிரி பெயரையும் வினையையும் சேர்ந்து அவற்றின் தன்மையை விளக்கும் சொல்லுக்கு உரிச்சொல் என்று பெயர். இப்பொழுது சொற்கள் எத்தனைவகைப் படுகின்றன? அவை எவை?

மாண:—சொற்கள் நான்கு வகைப்படும். அவை பெயர்ச்சொல்· வினைச் சொல். இடைச் சொல். உரிச்சொல் என்பன.

பயிற்சி 6

பின் வருவனவற்றிலிருந்து பெயர்ச்சொல், வினைச் சொல், என்ற இரண்டையும் தனித்தனியாக எடுத்தெழுதுக.

புத்தகம் வாங்கினான்.
மதுரைக்குச் சென்றான்.
தசரதன் அயோத்தியை ஆண்டான்.
கந்தன் விளையாடினான்.
சூரியன் கிழக்கே உதிக்கின்றான்.
ஜனகன் மகள் சீதை.
சித்திரம் எழுதினான்.
கண்ணகி கற்பில் சிறந்து விளங்கினாள்.
பறவைகள் பறந்தன.

மாணவர்கள் பள்ளிக்கூடம் போகிறார்கள்.

மரம் வளர்ந்தது.

செல்வம் மிகப் பெற்றான்.

கந்தன் நல்ல பையன்.

பெயர்	வினை

2. பெயர்ச்சொல்

உபா:—பெயர்ச் சொல் என்றால் என்ன?

மாண:—ஒரு பொருளுக்குப் பெயராக வருவது பெயர்ச் சொல்.

உபா:—மரம், கல், பொன், புத்தகம் இவைகள் எவற்றின் பெயர்கள்.

மாண:—இவைகளெல்லாம் பொருள்களின் பெயர்கள்.

உபா:—மதுரை, பூமி, ஆகாயம் முதலியன எவற்றின் பெயர்ச் சொற்கள்?

மாண:—இடங்களின் பெயர்கள்.

59487

உபா:—மாதம், சித்திரை, வேனில், நாழிகை முதலியன என்ன பெயர்கள்?

மாண:—காலத்தின் பெயர்கள்.

உப:—கை, கால், கண், தலை, கிளை, கொம்பு முதலியன எவற்றின் பெயர்கள்?

மாண:—அவயவங்களின் பெயர்கள்.

உபா:—நன்மை, தீமை, செம்மை, வெண்மை இவைகள் என்ன சொற்கள்?

மாண:—குணங்களின் பெயர்கள்.

உபா:—நடத்தல், வருதல், முதலியன என்ன சொற்கள்?

மாண:—வினைச் சொற்கள்.

உபா:—நடத்தல், வருதல் என்பன நடந்தான், வந்தான் என்பனவற்றைப் போன்று இருக்கின்றனவா?

மாண:—இல்லை; நடத்தல், வருதல் என்ற இரண்டு தொழில்களைக் காட்டும் பெயர்களாக இருக்கின்றன.

உபா:—சரி, தாய், தந்தை, அண்ணன் என்பன என்ன சொற்கள்?

மாண:—அவைகளும் பெயர்ச்சொற்களே. அவைகள் சொந்தங்களைக் காட்டுகின்றன.

உபா:—ஆகவே பெயர்ச்சொற்கள் எத்தனை வகையாக வருகின்றன?

மாண:—ஏழு வகையாக வருகின்றன.

உபா:—அவ்வேழு வகைகளையும் சொல்.

மாண:—பொருட் பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப் பெயர், குணப்பெயர், தொழிற் பெயர், முறைப் பெயர் என்பன.

பயிற்சி 7

பின்வருவனவற்றிலிருந்து எழுவகைப் பெயர்ச் சொற்களை யும் தனித்தனியாகப் பிரித்து எழுதுக.

மதுரை பெரிய நகரம்.
கண்ணால் பார்க்கலாம்.
மரத்தின்கிளை முறிந்தது.
யானை பெரிய மிருகம்.
மாடு கொம்புள்ளது.
ஒரு வாரத்தில் நாட்கள் எழு
காலையில் எழுந்து படித்தல் நன்மை தரும்.
உண்மை உயர்வு தரும்.
தந்தையும் மைந்தனும் வந்தார்கள்.
வண்மையில் சிறந்தவன் கர்னன்.
ஆகாயம் நீல நிறமானது.
பூமியில் பல தேசங்கள் இருக்கின்றன.

பொருட்பெயர்	இடப்பெயர்	காலப் பெயர்	சினைப்பெயர்

குணப்பெயர்	தொழிற் பெயர்	முறைப் பெயர்

3. வினைச்சொல்

உபா:—வினைச் சொல் என்றால் என்ன ?

மாண:—ஒரு பொருளின் வினையைக் காட்டும் சொல் வினைச் சொல்.

உபா:—சில வினைச் சொற்களைச் சொல்

மாண:—நடந்தான். வந்தான். செல்கிறது. போனது. பாடினார். படிப்பார்கள். உண்டான். செல்வான். வந்தன.

4. திணை

உபா:—கந்தன் வந்தான். கழுகு பறந்தது. இவ்விரண்டில் கந்தனுக்குப் பின்னால் 'வந்தான்' என்றும், கழுகுக்குப் பின்னால் 'பறந்தது' என்றும் சொல்லி யிருக்கின்றதல்லவா ? அப்படிச் சொல்லாமல் கந்தன் வந்தது. கழுகுபறந்தான் என்று சொல்லலாமா?

மாண:—அப்படிச் சொல்லக் கூடாது.

உபா:—காரணமென்ன?

மாண—கந்தன் ஒரு மனிதன். கழுகு ஒரு பறவை; மனிதன் பறவையைக்காட்டிலும் உயர்ந்தவன் என்பதைக் காட்டுவதற்காக அப்படிச் சொல்லவேண்டும்.

உபா.—இம்மாதிரி உயர்ந்தவர்களுக்கு உயர்திணை யென்று பெயர். தாழ்ந்த பொருள்களுக்கு அஃறிணை யென்று பெயர். இப்பொழுது சொல்: உயர்திணை என்றால் என்ன? யார் யார் உயர்திணையிற் சேர்ந்தவர்கள்?

மாண:—உயர்ந்த பிரிவு உயர்திணை எனப்படும். மனிதரும் தேவரும் உயர்திணையைச் சேர்ந்தவர்கள்.

உபா:—அஃறிணை யென்றால் என்ன? அஃறிணையைச் சேர்ந்தவை எவை?

மாண:—உயர்வல்லாத பொருள்களெல்லாம் அஃறிணை. மனிதரையும் தேவரையும் தவிர மற்றெல்லாவிதமான உயிருள்ள பொருள்களும் உயிரில்லாப் பொருள்களும் அஃறிணையைச் சேர்ந்தவை.

பயிற்சி 8

பின் வருவனவற்றிலிருந்து உயர்திணையையும் அஃறிணையையும் எடுத்தெழுதுக.

ராமன் பள்ளிக்கூடம் போனான்.
மாடுகள் மந்தையாகச் சென்றன.
பறவைகள் கூடுகட்டி வாழ்கின்றன.
கந்தன் பம்பரம் ஆடினான்.
சுந்தரம் மதுரை சென்றான்.
ஜானகி மிதிலா நகரத்தரசன் மகள்.
கோவிந்தனும் கோபாலனும் சிநேகிதர்கள்

உயர் திணை	அஃறிணை

5. பால்

உபா:—அவன் வந்தாள் என்று சொல்லலாமா?

மாண:—சொல்லக் கூடாது.

உபா:—பின் எவ்வாறு சொல்ல வேண்டும்?

மாண:—அவன் வந்தான் என்ருவது அவள் வந்தாள் என்ருவது சொல்ல வேண்டும்.

உபா:—காரணமென்ன?

மாண:—அவன் என்பது ஆடவன் என்பதைக் காட்டும் சொல். வந்தாள் என்னும் சொல் பெண் என்பதைக் காட்டும் சொல். ஆதலால் 'அவன் வந்தான்' என்றும் 'அவள் வந்தாள்' என்றும் சொல்ல வேண்டும்.

உபா:—இவ்விருவரையும் சேர்த்துச் சொல்லும்பொழுது எப்படிச் சொல்லவேண்டும்?

மாண:—'அவர்கள் வந்தார்கள்' என்று சொல்ல வேண்டும்.

உபா:—ஆண் தன்மையைக் குறிக்கும் சொல்லே ஆண்பால் என்றும் பெண் தன்மையைக் குறிக்கும் சொல்லேப்பெண் பால் என்றும் இருவரையும் குறிக்கும் சொற்களேப் பலர் பால் என்றும் சொல்லவேண்டும். இப்பொழுது ஆண் பாற் சொற்களில் சில சொல்.

மாண:—இராமன், அவன், வந்தான், கந்தன், அரசன்.

உபா:—பெண்பாற் சொற்களில் சில சொல்.

மாண:—சீதை, அவள், பாடினுள், தமயந்தி, அரசி.

உபா:—பலர்பாற் சொற்களில் சில சொல்.

மாண:—அவர், வந்தார், அரசர்.

உபா:—இம்மூன்று பாற்சொற்களும் எந்தத் திணையைச் சேர்ந்தன?

மாண:—உயர் திணையைச் சேர்ந்தவைகளாம்.

உபா:—ஆகவே உயர்திணையைச் சேர்ந்த பால்கள் எவை?

மாண:—ஆண்பால், பெண்பால், பலர்பால் என்ற மூன்றும் உயர்திணையைச் சேர்ந்த பால்களாம்.

உபா:—மாடு ஒன்றுக்கு மேற்பட்டிருந்தால் எப்படிச் சொல்ல வேண்டும்?

மாண—மாடுகள் என்று சொல்லவேண்டும்.

உபா:—பறவை, கல், புத்தகம் இவைகளை அம்மாதிரி ஒன்றுக்கு மேற்பட்டால் எவ்வாறு சொல்ல வேண்டும்?

மாண:—பறவைகள், கற்கள், புத்தகங்கள் என்று சொல்ல வேண்டும்.

உபா:—ஒரு பொருளுக்கு ஒருமையென்றும் ஒன்றுக்கு மேற்பட்டவைகளுக்குப் பன்மையென்றும் பெயர். இப்பொழுது பறவை, கல், புத்தகம், மாடு இந்நான்கும் எதைச் சேர்ந்தவை.

மாண:—பறவை, கல், புத்தகம், மாடு இந்நான்கும் ஒருமை.

உபா:—அவற்றின் பன்மை யுருவங்களைச் சொல்.

மாண:—பறவைகள், கற்கள் புத்தகங்கள், மாடுகள்.

உபா:—ஒருமையை ஒன்றன்பால் என்றும் பன்மையைப் பலவின்பால் என்றும் சொல்ல வேண்டும். இவ்வொன்றன்பாலும் பலவின்பாலும் எத்திணையைச் சேர்ந்தன?

மாண:—அஃறிணையைச் சேர்ந்தன.

உபா:—மொத்தம் பால்கள் எத்தனை? அவை எவை?

மாண:—பால்கள் ஐந்து. அவை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பன.

பயிற்சி 9

பின்வரும் கதையிலிருந்து ஐந்து பால்களுக்கும் உரிய சொற்களைப் பிரித்தெழுதுக.

பிருதிவிராய் என்பவன் டெல்லிக்கரசன். ஜெயச்சந்திரன் அஜ்மேரின் வேந்தன். இவர்களிருவருக்கும் பகைமூண்டது. ஜயச்சந்திரன் பிருதிவியை அவமானப்படுத்த எண்ணினன். ஜயச்சந்திரனுக்கு ஸம்யுக்தை என்ற ஒரு பெண் இருந்தாள். அவள் அழகிலும் குணத்திலும் சிறந்தவள். அவள் பிருதிவியை மணக்க விரும்பினள். அவளுக்குச் சயம்வரம்நடந்தது. பிருதிவிராய்க்கு அழைப்புப்பத்திரிகை வரவில்லை. அநேக அரசர்கள் சுயம்வரத்துக்கு வந்தார்கள். பிருதிவி சில குதிரை வீரர்களோடு கொலுமண்டபத்தின் கதவண்டை ஒளித்திருந்தான். ஸம்யுக்தை மணமாலையைக் கையிலேந்தி தன் தாதியுடன் மண்டபத்தில் நுழைந்தாள். அங்கிருந்த அரசர்களுள் ஒருவரையும் மணக்க அவள் விரும்பவில்லை. கடைசியில் கதவண்டையில் அவள் வந்தாள். பிருதிவி அவளைத் தன் குதிரைமீது ஏற்றிக்கொண்டு ஓடிவிட்டான். தாதிகள் திடுக்கிட்டனர். அங்கிருந்த அரசர்கள் சீறியெழுந்தனர். ஜெயச்சந்திரன் கடுஞ்சினங்கொண்டான். அவன் மனைவி ஏக்கமுற்றாள். அதிவேகமான குதிரைகளின்மீது ஏறிச் சில வீரர்கள் பிருதிவியைப் பின்தொடர்ந்தனர். ஆனால் அவன் மலைகளைக் கடந்து ஓடைகளைத் தாண்டி வனங்களினூடே சென்று ஸம்யுக்தையுடன் டெல்லி போய்ச் சேர்ந்தான்.

ஆண்பால்.	பெண்பால்.	பலர்பால்.	ஒன்றன்பால்.	பலவின்பால்.

6. இடம்

உபா:—வந்தேன், வந்தாய், வந்தான் இம்மூன்று சொற்களில் ஒன்றுக் கொன்று உள்ள வித்தியாசம் என்ன?

மாண:—'வந்தேன்' என்பது வந்தவன் தன்னைத்தானே சொல்லிக் கொள்வது. 'வந்தாய்' என்பது வந்தவனைப் பார்த்துச் சொல்வது. 'வந்தான்' என்பது வேறொருவன் வந்ததைப் பற்றி தன் முன்னே இருப்பவனிடம் சொல்வது.

உபா:—தன்னைப்பற்றிப் பேசுவது தன்மை, தான் சொல்வதை முன்னால் இருந்து கேட்பவன் முன்னிலை, தன்மையும் முன்னிலையும் ஒழிந்த மற்ற எல்லாம் படர்க்கை. இவைகள் இடம் எனப்படும். ஆகவே இடம் எத்தனை வகைப் படும்?

மாண:—தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்றுவகைப் படும்.

பயிற்சி 10.

பின் வருவன வற்றிலிருந்து தன்மை முன்னிலை படர்க்கை என்ற மூன்றிடங்களுக்கும் உரிய சொற்களை எடுத்தெழுதுக.

நான் பாடம் படித்தேன்.
நீ நேற்று வந்தாய்.
கந்தன் வீட்டுக்குச் சென்றான்.
ஜானகி பாட்டுப் பாடினாள்.
பாம்பு படமெடுத் தாடிற்று.
நீங்கள் எங்கே சென்றீர்கள்?
நாங்கள் புத்தகம் வாங்கினோம்.
மாடுகள் கூட்டமாய்ச் சென்றன.
இந்தியா தேசம் பெரியது.
அது நமது தேசம்.

7. காலம்

உபா:—நேற்று வருவான், நாளை வந்தான் என்று சொல்லலாமா?

மாண:—சொல்லக் கூடாது. நேற்று வந்தான். நாளை வருவான். என்று சொல்ல வேண்டும்.

உபா:—ஏன்?

மாண:—'நேற்று' என்பது நடந்துபோனது; 'நாளை' என்பது இனிமேல் வரப்போவது. ஆதலால் 'நேற்று வந்தான்' என்றும் 'நாளை வருவான்' என்றும் தான் சொல்லவேண்டும்.

உபா:—இப்பொழுது நடக்கிற காரியத்தைச் சொல்ல வேண்டுமானால் எப்படிச் சொல்வாய்?

மாண:—வருகிறான் என்று சொல்வேன்.

உபா:—நடந்து போனதை இறந்த காலம் எனவும் நடக்கின்றதை நிகழ்காலம் என்றும் நடக்கப்போவதை எதிர்காலம் என்றும் சொல்ல வேண்டும். ஆகவே காலம் எத்தனை வகைப்படும்?

மாண:—இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று வகைப்படும்.

பயிற்சி 11.

பின் வருவனவற்றிலிருந்து இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலங்களுக்கு முரிய சொற்களை எடுத்தெழுதுக.

வந்தது.	பார்க்கின்றன.	உண்பார்.	பாடுவான்.
நின்றன.	ஓடிற்று.	படிக்கின்றான்.	இருக்கிறது.
சென்றன.	வருவான்.	கட்டினார்.	கொடுப்பான்.
எடுத்தாள்.	நடக்கின்றது.	மேய்ந்தன.	வருகின்றன.

8. வேற்றுமை

உபா:—'கந்தன் பார்த்தான்.' இதில் பார்த்தவன் யார் ?

மாண:—கந்தன்.

உபா:—'கந்தனைப் பார்த்தான்' இதில் கந்தன் எப்படி யிருக்கின்றான் ?

மாண:—இதில் கந்தன் வேறொருவனால் பார்க்கப்படுபவனாயிருக்கின்றான்.

உபா:—ஆகவே 'கந்தன்' என்ற பெயர்ச் சொல் 'கந்தனை' யென்றவிடத்தில் பொருள் வேறுபட்டிருக்கிறதல்லவா?

மாண:—ஆம்.

உபா:—இம்மாதிரி பெயர்ச் சொல்லின் பொருளை வேறு படுத்துவதற்குத் தான் வேற்றுமை என்று பெயா.

மலை பெரியது

மலையைத் தொளைத்தான்

மலையால் மழைதடுத்தான்.

மலைக்குப் பலியிட்டான்

மலையிலிருந்து நீங்கினன்

மலையினது சிகரம்

மலையின்கண் ஒளி

மலையே!

இப்பொழுது மலை யென்னும் பெயர்ச் சொல் எத்தனை விதமாக வேற்றுமைப் பட்டிருக்கிற தென்பதைப் பார். முதலில் சாதாரண பெயர்ச் சொல்லாகவே இருக்கிறது. இரண்டாவதில் தொளைக்கப் பட்டதாக மாற்றுகிறது. அதாவது. செய்யப்பட்டதாகின்றது. மூன்றாவது மழையைத் தடுப்பதற்குக் கருவியாக மாறுகின்றது. நான்காவது பலியைக்

கொள்ளும் பொருளாக மாறுகின்றது. ஐந்தாவது நீக்கப்படும் பொருளாக மாறுகிறது. ஆறுவது சிகரத்தோடு சம்பந்த முடையதாக மாறுகிறது. ஏழாவது ஒலிக்கு இருப்பிடமாக மாறுகின்றது. எட்டாவது அழைக்கப்படும் பொருளாக மாறுகின்றது. ஆகவே பெயர்ச் சொற்கள் எத்தனை விதமாக வேற்றுமைப்படுகின்றன?

மாண:—எட்டு விதமாக வேற்றுமைப்படுகின்றன.

உபா:—எட்டு விதமான வேற்றுமைகளையும் சொல் ?

மாண:—சாதாரண பெயர்ச் சொல்லா யிருப்பது. செய்யப் பட்ட பொருளாக மாறுவது. கருவியாக மாறுவது. கொள்ளும் பொருளாக மாறுவது. நீக்கப்படும் பொருளாக மாறுவது. சம்பந்தப் பொருளாக மாறுவது. இடப்பொருளாக மாறுவது. அழைக்கப்படும் பொருளாக மாறுவது.

உபா:--ஆகவே இவ்வெட்டுவித வேறுபாட்டைக் காண்பிக்கும் 'மாறுபாடில்லாத பெயர், செயப்படுபொருள், கருவிப் பொருள், கொள்ளுதற் பொருள், நீக்கப் பொருள், சம் பந்தப் பொருள், இடப் பொருள், விளிப் பொருள்' என்ற இவற்றை என்ன சொல்லலாம்?

மாண:—வேற்றுமை என்பது பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவதே. ஆதலால் இவற்றைவேற்றுமைகளின் போருள்கள் என்று சொல்லலாம்.

உபா:—இப்பொருள்களைத் தவிர வேற்றுமைகளை அறிவ தற்கு அடையாளங்கள் எவையேனும் இருக்கின்றனவா?

மாண:—ஆம்.

உபா:—அவ்வடையாளங்கள் எல்லா வேற்றுமைகளுக்கும் இருக்கின்றனவா?

மாண:—இல்லை. முதல் வேற்றுமையைத் தவிர மற்ற ஏழு வேற்றுமைகளிலும் அடையாளங்கள் இருக்கின்றன.

உபா-—அவ்வடையாளங்கள் எவை? எந்த எந்த வேற்றுமைக்கு என்ன என்ன அடையாளங்கள் இருக்கின்றன.

உபா:—இரண்டாம் வேற்றுமைக்கு ஐ என்பதும் மூன்றும் வேற்றுமைக்கு ஆல் என்பதும் நான்காம் வேற்றுமைக்கு, கு என்பதும் ஐந்தாம் வேற்றுமைக்கு இன் என்பதும் ஆறும் வேற்றுமைக்கு அது என்பதும் ஏழாம் வேற்றுமைக்கு கண் என்பதும் எட்டாம் வேற்றுமைக்கு ஏ என்பதும் அடையாளங்களாக இருக்கின்றன.

உபா:—இவ்வடையாளங்களுக்கு உருபுகள் என்று பெயர். வேற்றுமைகளுக்கு, இவ்வுருபுகளைத் தவிர வேறு சில உருபுகளும் உண்டு. இப்பொழுது வேற்றுமைகளை எவற்றால் அறிந்து கொள்ளலாம்?

மாண:—வேற்றுமைகளை பொருள், உருபு என்ற இரண்டாலும் அறிந்துகொள்ளலாம்.

உபா:—முதல் வேற்றுமையை விளக்குக.

மாண:—முதல் வேற்றுமை மாறுபாடில்லாத பெயர்ச் சொல்லாம். அப்பெயர்ச்சொல் வினை, பெயர், வினா என்ற மூன்றையும் கொண்டு முடியும்.

(உ - ம்.) கந்தன் வந்தான்—வினை
கந்தன் இவன்—பெயர்
கந்தன் யாவன்?—வினா

உபா:—இரண்டாம் வேற்றுமையை விவரி.

மாண:—இரண்டாம் வேற்றுமையின் பொருள் செயப்படு பொருள். உருபு ஐ என்பதாம்.

(உ-ம்.) கந்தனைக் கண்டான்
வீட்டைக் கட்டினான்

உபா:—மூன்றாம் வேற்றுமையை விவரி.

மாண:—மூன்றாம் வேற்றுமையின் பொருள் கருவிப் பொருள், கருத்தாப்பொருள், உடனிகழ்ச்சிப் பொருள் என்பனவாம். உருபுகள். ஆல், ஒடு, உடன் என்பவைகளாம்.

(உ-ம்.) வாளால் வெட்டினான்—கருவி
தச்சனால் மேஜை செய்யப்பட்டது—கருத்தா
தந்தையோடு மைந்தன் வந்தான்—உடனிகழ்ச்சி

உபா:—நான்காம் வேற்றுமையை விவரி.

மாண:—நான்காம் வேற்றுமையின் பொருள் கொள்ளுதற் பொருள். உருபு. கு என்பதாம்.

(உ-ம்.) ஏழைகளுக்கு உணவு கொடுத்தான்.
நெல்லுக்கு நீர் பாய்ச்சினான்.

உபா:—ஐந்தாம் வேற்றுமையை விவரி.

மாண:—ஐந்தாம் வேற்றுமையின் பொருள்கள் நீக்கம் எல்லை ஏது என்பன. உருபு இன் என்பதாம்.

(உ-ம்.) மலையின் நீங்கினான்—நீக்கம்
இந்தியாவின் வடக்கு இமயமலை—எல்லை
கல்வியிற் பெரியவன் கம்பன்—ஏது.

உபா:—ஆறாம் வேற்றுமையை விவரி.

மாண:—ஆறாம் வேற்றுமையின் பொருள் சம்பந்தப் பொருளாம். உருபுகள்; அது, உடைய என்பன.

(உ-ம்.) கந்தனது புத்தகம்.
அவனுடைய வீடுகள்.

உபா:—ஏழாம் வேற்றுமையை விவரி.

மாண:—ஏழாம் வேற்றுமையின் பொருள் இடப்பொருள். உருபுகள் இல், கண், இடத்தில் என்பன.

(உ-ம்) வீட்டில் இருக்கின்றது.
மணியின்கண் ஒளி.
என்னிடத்தில் உள்ளது.

உபா:—எட்டாம் வேற்றுமையை விவரி.

மாண:—எட்டாம் வேற்றுமையின் பொருள் விளிப்பொருள். உருபு சொல்லின் கடைசியில் ஏ ஓ என்ற எழுத்துக்கள் மிகுதலும் கடைசி யெழுத்துக்கு அடுத்த எழுத்து நீண் டொலிப்பதும் கடைசி யெழுத்துக் குறைவதும் கடைசி யெழுத்துத் திரிவதுமாம்.

(உ-ம்)		
	கந்தனே வா!	ஏ மிகுதல்.
	அப்பனோ உண்!	ஓ மிகுதல்.
	மக்காள் வாருங்கள்!	நீண்டொலித்தல்.
	தோழ வருக!	குறைவது.
	பிள்ளாய் படி!	திரிதல்.

பயிற்சி 12.

இராமன் கோவிந்தன்

இராமன்		கோவிந்தன்
இராமனை	(ஐ)	கோவிந்தனை
இராமனுடன்	(உடன்)	கோவிந்தனுடன்
இராமனுக்கு	(கு)	கோவிந்தனுக்கு
இராமனின்	(இன்)	கோவிந்தனின்
இராமனுடைய	(உடைய)	கோவிந்தனுடைய
இராமனிடத்தில்	(இடத்தில்)	கோவிந்தனிடத்தில்
இராமா!	(ஆ)	கோவிந்தா!

பயிற்சி 13.

தந்தை　　　　தாய்

தந்தை		தாய்
தந்தையை	(ஐ)	தாயை
தந்தையோடு	(ஒடு,உடன்)	தாயுடன்
தந்தைக்கு	(கு)	தாய்க்கு
தந்தையின்	(இன்)	தாயின்
தந்தையினுடைய	(உடைய)	தாயினுடைய
தந்தையினிடத்தில்	(இடத்தில்)	தாயினிடத்தில்
தந்தாய்	(ஏ)	தாயே

பயிற்சி 14

மரம்　　　　குணம்

மரம்		குணம்
மரத்தை	(ஐ)	குணத்தை
மரத்தால்	(ஆல்)	குணத்தால்
மரத்திற்கு	(கு)	குணத்திற்கு
மரத்தின்	(இன்)	குணத்தின்
மரத்தினுடைய	(உடைய)	குணத்தினுடைய
மரத்தில்	(இல்)	குணத்தில்

பயிற்சி 15.

மாடு　　　　காடு

மாடு		காடு
மாட்டை	(ஐ)	காட்டை
மாட்டுடன்	(உடன், ஒடு)	காட்டோடு
மாட்டிற்கு	(கு)	காட்டிற்கு
மாட்டின்	(இன்)	காட்டின்
மாட்டினது	(அது)	காட்டினுடைய
மாட்டின்கண்	(கண்)	காட்டின்கண்

பயிற்சி 16.

நான் நாம்

நான்		நாம்
என்னை	(ஐ)	எம்மை
என்னால்	(ஆல்)	எம்மால்
எனக்கு	(கு)	எமக்கு
என்னின்	(இன்)	எம்மின்
என்னுடைய	(உடைய)	எம்முடைய
என்னிடத்தில்	(இல்)	எம்மிடத்தில்

பயிற்சி 17

நீ, நீர், நீங்கள்

நீ		நீர்		நீங்கள்
உன்னை	(ஐ)	உம்மை	(ஐ)	உங்களை
உன்னால்	(ஆல்)	உம்மால்	(ஆல்)	உங்களால்
உனக்கு	(கு)	உமக்கு	(கு)	உங்களுக்கு
உன்னின்	(இன்)	உம்மின்	(இன்)	உங்களின்
உன்னுடைய	(உடைய)	உம்முடைய	(உடைய)	உங்களுடைய
உன்னிடத்தில்	(இடத்தில்)	உம்மிடத்தில்	(இடத்தில்)	உங்களிடத்தில்

பயிற்சி 18

அவன் அவள் அவர்

அவன்		அவள்		அவர்
அவனை	(ஐ)	அவளை	(ஐ)	அவரை
அவனால்	(ஆல்)	அவளால்	(ஆல்)	அவரால்
அவனுக்கு	(கு)	அவளுக்கு	(கு)	அவருக்கு
அவனின்	(இன்)	அவளின்	(இன்)	அவரின்
அவனுடைய	(உடைய)	அவளுடைய	(உடைய)	அவருடைய
அவனிடத்தில்	(இல்)	அவளிடத்தில்	(இல்)	அவரிடத்தில்

பயிற்சி 19

அது, அவை

அது		அவை
அதை, அதனை	(ஐ)	அவைகளை
அதனால்	(ஆல்)	அவைகளால்
அதற்கு	(கு)	அவைகளுக்கு
அதனின்	(இன்)	அவற்றின், அவைகளின்
அதனுடைய	(உடைய)	அவற்றினுடைய அவைகளினுடைய
அதனிடத்தில்	(இடத்தில்)	அவற்றினிடத்தில், அவைகளினிடத்தில்

III. வாக்கியம்

உபா:—ஒரு சொல்லோடு இன்னொரு சொல்லைச் சேர்த்துச் சொல்.

மாண:—ஆகாயம் மரம்.

உபா:—இப்படிச் சொற்கள் ஒன்றோடொன்று தொடர்வதற்கு என்ன பெயர் சொல்லலாம்?

மாண:—சொற்றொடர் என்று சொல்லலாம்.

உபா:—கப்பல் மிகவும், கடல் நிறைய, கந்தன் கடைக்கு, கந்தன் வந்தான், இராமன் படிக்கின்றான், மயில் ஆடுகிறது. இவ்வாறு சொற்றொடர்களில் உனக்குப் பொருள் விளங்கும் சொற்றொடர்கள் எவை? காரணமென்ன?

மாண:—கந்தன் வந்தான்—ராமன் படிக்கின்றான்—மயில் ஆடுகிறது இம்மூன்று சொற்றொடர்களும் பொருள் விளங்குகின்றன. ஏனென்றால் இவற்றில் பொருள் முடிந்திருக்கின்றது. முதல் மூன்று சொற்றொடர்களிலும் பொருள் முற்றுப் பெறவில்லை.

உபா:—இம்மாதிரி பொருள் முடிந்த சொற்றொடருக்கு வாக்கியம் என்று பெயர். ஆகவே வாக்கியம் என்றால் என்ன?

மாண:—பொருள் முடிவுபெற்ற சொற்றொடருக்கு வாக்கியம் என்று பெயர்.

உபா:—இரண்டு வாக்கியங்கள் சொல்.

மாண:—இராமன் பாடம் படித்தான். பசுக்கள் ஓடின.

உபா:—ஆகவே எழுத்து, சொல், வாக்கியம் இம்மூன்றும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதனவாயிருப்பதெப்படி?

மாண:—எழுத்துக்களால் சொல்லும் சொற்களால் வாக்கியமும் உண்டாகின்றன. ஆதலின் இம்மூன்றும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதன வாகின்றன.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்.

உபா:—கந்தன் வந்தான், இராமன் பாடம் படித்தான். இவ்விரண்டு வாக்கியங்களிலும் எத்தனை எத்தனை சொற்கள் இருக்கின்றன?

மாண:—முதல் வாக்கியத்தில் இரண்டு சொற்களும் இரண்டாம் வாக்கியத்தில் மூன்று சொற்களும் இருக்கின்றன.

உபா:—இவ்விரண்டு சொற்றொடர்களையும் வாக்கியம் என்று சொல்லக் காரணம் என்ன?

மாண:—இவ்விரண்டு சொற்றொடர்களும் பொருள் முடிவடைந்திருக்கின்றனவாதலால் வாக்கியம் என்று சொல்லுகிறோம்.

உபா:—இவ்விரண்டு வாக்கியங்களிலும் வந்தான் என்றசொல்லையும் படித்தான் என்ற சொல்லையும் எடுத்துவிட்டால் என்னவாகும்?

மாண:—பொருள் முடிவடையாத சொற்றொடர்களாகிவிடும்.

உபா:—ஆகவே எந்தச் சொற்களால் பொருள் முற்றுப்பெறுகின்றது?

மாண:—வந்தான், படித்தான் என்ற சொற்களால் பொருள் முடிவடைந் திருக்கின்றது.

உபா:—வந்தான், படித்தான் இவையிரண்டும் என்ன சொற்கள்?

மாண:—இரண்டும் வினைச் சொற்கள்.

உபா:—வினைச்சொற்கள் எதனை உணர்த்தும்?

மாண:—வினைச்சொற்கள் காரியத்தைக் காட்டும்.

உபா:—எந்தக் காரியமும் தானாகவே நடைபெறுமா?

மாண:—காரியங்கள் தாமாகவே நடைபெறா. யாராவது செய்துதான் உண்டாகும்.

உபா:—'கந்தன் வந்தான்' என்ற வாக்கியத்தில் 'வந்தான்' என்ற வினைச் சொல்லிலுள்ள காரியத்தைச் செய்தவன் யாவன்?

மாண—'கந்தன்.'

உபா:—இராமன் பாடம் படித்தான். என்ற வாக்கியத்திலுள்ள படித்தான் என்ற வினைச் சொல்லிற் குரிய காரியத்தைச் செய்தவன் யாவன்?

மாண:—'இராமன்'

உபா:—இவற்றை எப்படிக் கண்டு பிடித்தாய்?

மாண:—வந்தான், படித்தான் என்ற வினைச்சொற்களின்முன் யார்? என்ற கேள்வியைக் கேட்டுக் கண்டு பிடித்தேன்.

உபா:—'மழை பெய்தது' என்ற வாக்கியத்தில் அதை எப்படிக் கண்டு பிடிப்பாய்?

மாண:—பெய்தது என்பதன் முன் எது? என்ற கேள்வியைப் போட்டு மழை யென்பதைக் கண்டு சொல்வேன்.

உபா:—வந்தான், படித்தான் என்றவைகளுக்கு மட்டும் யாரென்று கேட்பானேன்?

மாண:—வந்தான், படித்தான் என்பன உயர்திணை வினைச் சொற்கள்; பெய்தது என்பது அஃறிணை. உயர்திணைக்கு யாரென்றும் அஃறிணைக்கு எது என்றும் கேட்க வேண்டும்.

உபா:—வந்தான், படித்தான் என்ற இரண்டும் பொருள் முடிவடையும் இடமானால் பொருள் எழும் இடம் எவை?

மாண:—கந்தன் இராமன் என்ற இரண்டும் பொருள் எழும் இடங்கள்.

உபா:—சரி. இவ்வாறு பொருள் எழும் இடத்திற்கு எழுவாய் என்று பெயர். பொருள் முடிவடையும் இடத்திற்குப் பயனிலை என்று பெயர். இப்பொழுது இரண்டு வாக்கியங்களிலும் எழுவாய் பயனிலைகளைச் சொல்.

மாண:—'கந்தன் வந்தான்' என்ற வாக்கியத்தில் 'கந்தன்' எழுவாய். 'வந்தான்' பயனிலை. 'இராமன் பாடம் படித்தான்' என்ற வாக்கியத்தில் 'இராமன்' எழுவாய். 'படித்தான்' பயனிலை.

உபா:—எழுவாயை எப்படிக் கண்டுபிடிக்க வேண்டும்?

மாண:—பயனிலைக்கு முன்னால் யார்? அல்லது எது? என்ற கேள்விகளைக் கேட்டு வரும் விடைகளைக் கொண்டு எழுவாயைக் கண்டறிய வேண்டும்.

உபா:—'இராமன் பாடம் படித்தான்' என்ற வாக்கியத்தில் பாடம் என்ற சொல் எதைக் காட்டுகின்றது?

மாண:—படிக்கப்பட்டது எது? என்பதைக் காட்டுகின்றது.

உபா:—படிக்கப்பட்டது என்றால் என்ன?

மாண:—படித்தல் என்ற செய்கையின் பயனை அடைந்தது. அதாவது செய்யப்பட்ட பொருளைக் காட்டுகின்றது.

உபா:—இம்மாதிரி செய்கையின் பயனை அடைந்த பொருளுக்குச் செயப்படுபொருள் என்று பெயர். இச்செயப்படுபொருளை எப்படிக் கண்டுபிடிப்பாய்?

மாண:—பயனிலையின் முன் 'எதை?' அல்லது 'யாரை?' என்ற கேள்விகளைக் கேட்டுக் கண்டுபிடிப்பேன்.

உபா:—ஆகவே வாக்கியத்தில் எத்தனை உறுப்புக்கள் இருக்கின்றன?

மாண:—எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என மூன்று உறுப்புக்கள் இருக்கின்றன.

பயிற்சி 20.

கீழ்க்கண்ட வாக்கியங்களிலிருந்து எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற மூன்றையும் தனித்தனியாகப் பிரித்து அடியிலுள்ள கட்டத்தில் அந்த அந்த எண்ணுக்கு நேரே எழுது.

1. கோவிந்தன் விளையாடினான்.
2. பூனை பாலைக் குடித்தது.
3. இராமன் மாட்டை மேய்த்தான்.
4. மழை பெய்தது.
5. கண்ணன் புத்தகம் வாங்கினான்.
6. இராமன் வில்லை முறித்தான்.
7. கண்ணகி மதுரையை எரித்தாள்.
8. ஜானகி மாலை தொடுத்தாள்.
9. அரசன் பகைவரை வென்றான்.
10. தமிழரசர்கள் புலவர்களைப் போற்றினார்கள்.
11. தமிழ் இனிமையானது
12. மாடு தண்ணீர் குடித்தது.

எழுவாய்	பயனிலை	செயப்படு பொருள்
1	1	1
2	2	2
3	3	3
4	4	4
5	5	5
6	6	6
7	7	7
8	8	8
9	9	9
10	10	10
11	11	11
12	12	12

உபா:—கந்தன் வந்தான் என்ற வாக்கியத்தில் செயப்படு பொருள் இருக்கின்றதா ?

மாண:—இல்லை.

உபா:—ஏன் ?

உபா:—வந்தான் என்ற பயனிலைக்கு முன்னால் எதை ? அல்லது யாரை? என்ற கேள்விகளைப்போட்டுக் கேட்கும் பொழுது விடையில்லாததனால் செயப்படுபொருள் இல்லை.

உபா:—வந்தான், சென்றான், நின்றான், ஓடினான், இருந்தான், உண்டான், பார்த்தான், படித்தான், எடுத்தான், கொடுத்தான். இவ்வினைச் சொற்களில் எவற்றிற்குச் செய்யப்படுபொருள் கிடையாது? எவற்றிற்கு உண்டு?

மாண:—வந்தான், சென்றான், நின்றான், ஓடினான், இருந்தான் என்ற இவ்வைந்து வினைச்சொற்களுக்கும் செயப்படு பொருள் கிடையாது. உண்டான். பார்த்தான். படித்தான். எடுத்தான். கொடுத்தான். என்ற இவ்வைந்து வினைச்சொற்களுக்கும் செயப்படுபொருள் உண்டு.

உபா:—ஆகவே வினைச்சொற்களில் எத்தனைவகை இருக்கின்றன?

மாண:—இரண்டுவகை இருக்கின்றன.

உபா:—அவை எவை?

மாண:—செயப்படுபோருள் இல்லாத வினைச்சோல். செயப்படுபோருள் உள்ள வினைச்சோல் என்பன.

உபா:—ஆகவே 'கந்தன் வந்தான்' என்ற வாக்கியத்தில் செயப்படுபொருள் இல்லாத காரணம் என்ன?

மாண:—வந்தான் என்ற பயனிலை செயப்படுபொருள் இல்லாத வினைச்சொல் என்பதே காரணம்.

உபா:—அப்படியானால் ஒரு வாக்கியத்தில் செயப்படுபொருள் இருக்க வேண்டுமானால் பயனிலை எவ்வாறிருக்க வேண்டும்?

மாண:—செயப்படுபொருள் உள்ள வினைச்சொல்லாயிருக்க வேண்டும்.

P3133
N33
59487

பயிற்சி 21

கீழ்க்கண்ட கட்டத்தில் செயப்படுபொருள் உள்ள வாக்கியங்கள் பன்னிரண்டும் செயப்படுபொருள் இல்லாத வாக்கியங்கள் பன்னிரண்டும் எழுதுக.

செயப்படுபொருள் உள்ள வாக்கியம்	செயப்படுபொருள் இல்லாத வாக்கியம்
1	1
2	2
3	3
4	4
5	5
6	6
7	7
8	8
9	9
10	10
11	11
12	12

உபா:—வாக்கியத்திற்குரிய உறுப்புக்கள் எத்தனை?

மாண:—எழுவாய், பயனிலை, செய்ப்படுபொருள் என்பன.

உபா:—அவற்றில் எல்லா வாக்கியங்களிலும் இருக்கும் உறுப்புக்கள் எத்தனை?

மாண:—எழுவாய், பயனிலை என்ற இரண்டும் எல்லா வாக்கியங்களிலும் இருக்கும்.

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS